ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455


விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 26—3—44 | இதழ் 4.

## சமணரைக் கழுவேற்றிய கொடுமை.




"ஆரேரியிட்டெடுத்த
ஏடவை முன்னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்
போய் அணைய ஏற்றி
ஓரமணர் ஒழியாமே
கழுவிலேற்றி...

என்ற பாடல் திருத்தொண்டர் புராணசாரம்! கழுவிலேற்றிய கருணாமூர்த்திகளய்யா உமது காடுடைய சுடலைப்பொடிபூசிடும்கண்மணியர்கள்! வெட்கமாகஇல்லையா இதைக்கேட்க!

"அமணரைக்
கழுநுதிமேல்
இருந்தமிழ்நாட்டிடை
ஏற்றுவித்தோன்"

என்று, குலச்சிறையைக் குறித்துத் திருத்தொண்டர் திருவந்தாதி கூறுகிறது. இத்தகைய திருக்கூட்டத்தவராகிய தாங்கள் எப்படி ஐயா! ஜைன மாநாட்டிலேதலை நீட்டுகிறீர்! கழுவேற்றியதற்குக் கழுவாய் தேடுகிறீரா? கூறும், நெஞ்சில் கைவைத்துப்பாரும்.

*திராவிடர் கழகம், காஞ்சிபுரம்.*

## கலியாணசுந்தரரே! கழுவேற்றினரே!

## கழுவாய் தேடுகிறீரா?

ஜைனப்பெரு மக்களின் சிறப்புக்கூட்டத்திலே கலந்துகொள்ளும், திரு வி. கலியாணசுந்தரனாரே!

தாங்களோ சைவர்! நாயன்மார்களைத் தொழுதிடும் நீறுபூசி! உமது சைவமோ, சமணரைச் சித்திரவதை செய்தது. அச்சமணர்களை, உமது நாயன்மார்கள் நாக்கில் நரம்பின்றி நிந்தித்தனர். அப்பாடல்களே, சைவஅருட்பாக்களாக உள்ளன. சமணரைக் கழுவேற்றிய கருணைவள்ளல் (!) உமது திருஞானசம்பந்தர். கழுமாந்தருகே காவல்புரிந்தார் உமது குலச்சிறை. இத்தகைய கொடுமை புரிந்த சைவத்தையும் சுமக்கின்றீர், ஜைனர்களுடனும் குலாவுகிறீர்! அன்று உமது மதத்தலைவர்கள், ஜைனர்களைக் கழுவேற்றினதற்காக இன்று தாங்கள் கழுவாய் தேடுகிறீரா? தேடுவதானால், சைவம்செய்த இந்தக்கொடுஞ்செயலைக் கண்டித்துப் பேசும்! நாயன்மார்களென்போர் நிந்தனை செய்தனரே சமணர்களை, அதற்கு வெட்கித் தலைகுனிந்து ஜைனர்களிடம் மன்னிப்புக் கோரும்படி சைவத்துக்கு உபதேசம் செய்யும்!!

கழுவேற்றிய கொடுமையைமேலே சித்திரமூலம் காட்டியிருக்கிறோம், கண்டு கண்ணீர் மல்கி, அன்பே சிவம் என்ற பேச்சுக்கும் சமணரைக்கொன்ற செயலுக்கும் உள்ள பேதத்தைக் கண்டு, வெட்கமும் துக்கமும் கொண்டு, தலைகுனிந்து நில்லும்! இதோ, கழுவேற்றினர் என்பதற்கு உமது சைவ ஏடுகளிலிருந்தே ஆதாரம் காட்டுகிறோம், பாரும் உமது சைவத்தின் போக்கை.

★

*காஞ்சிபுரத்திலே, ஜைனப்பெருமக்களின் சிறப்புக்கூட்டமொன்றுக்குத்தலைமைதாங்கத், திரு. வி. கலியாணசுந்தரனார் வந்தார், 19—3—44ல். அதுபோது, காஞ்சிபுரம் திராவிடர் கழகத்தார், மேலேகாணப்படும் படத்தோடு கூடிய பாடலைத் துண்டு வெளியீடுகளாகவழங்கினர். அதன்பயன் யாதென்பது, அந்தச் சிறப்புக்கூட்டத்திலே ஏதேதோ பேசவேண்டுமென்றெண்ணிவந்து, வேறு எதைஎதையோ தமது நாகூறிடக்கேட்டு, நாதன்தாள் வாழ்க! நமச்சிவாயன்வாழ்க! என்று மனதிலே கூறிக்கொண்டு சென்ற சைவத்தமிழ்ச் சீலர்கட்குத் தெரியும்!*

*நிற்க, இச்சமுறை எங்ஙனம் நடைபெற்றது? ஜைனர்களுக்கு ஒரு ஆவல், சைவத்தை*

(2-பக்கம் பார்க்க.)

# கலியாணசுந்தரரே

1ம் பக்கத் தொடர்ச்சி.

ஆதரிக்கும் கலியாணசுந்தரர், ஜைனத்தைப் போற்றட்டும், காதுகுளிரக் கேட்போம் என்று! கலியாணசுந்தரருக்கும் ஒரு பெருமை, ஜைனரும் எம்மைஅழைத்திடுகின்றனர், யாம் யாவருக்கும் நல்லவரென்று சங்கே, முழங்கு! என்று கூறிக்கொள்ள ஒரு வாய்ப்பு! அது எப்படி இருப்பினும், சைவம், சமணத்தைப்படுத்தியபாடு, மக்களறிய வேண்டும் என்பதற்காகத், திராவிடர் கழகத்தார், துண்டு வெளியீடுகளைப் பரப்பினர். துவண்டவர்சிலர், துடித்தவர் பலர், தேவைதான், ஆனாலும்.........என்று இழுத்தவர்சிலர். சீறினசைவருமுண்டு! இது சு. ம. வின் வேலை என்று சித்தத்தில் செந்தேள் கொட்டினதுபோலக் கூறினர். இப்படித் தூற்றித்திரிவதுதானா முறை என்று கேட்டனர் சிலர். இது போன்ற சமயங்களிலே, அதாவது, உண்மையை ஒளிவின்றி எடுத்துவைக்கும் போது, ஓம் நமச்சிவாயா என்ற திருமந்திரம் ஓதும் மெய்யன்பர்களுக்கு, இந்தச் சுயமரியாதைக்காரர்கள், கண்டபடி ஏசுகிறார்கள், என்று பேசிடத்தோன்றுகிறதேயன்றி, "இவர்களின் கூற்றைப் பொய்யென்று காட்டுவோம்—ஆதாரத்தைநீட்டி இவர்தம்மின் கேள்வியை ஒட்டுவோம்—சந்தேகத்தைத் தீர்த்துச் சைவத்தின் கொடியை நாட்டுவோம்—என்று கூறஎண்ணம் பிறப்பதேயில்லை. பானையிலிருந்தால்தானே அகப்பையில் வரும்! அகத்திலே உண்மை இருந்தால்தான் புறத்திலே மெய்மிளிரும்!!

"என்ன இருந்தாலும், இந்தச்சுயமரியாதைக்காரர்கள், தங்கள்கருத்துக்கு மாறுபட்டவர்களைப்பற்றிக், கடுமையாகத்திட்டுகிறார்கள். இது எனக்குப்பிடிப்பது கிடையாது. எதிர்க்கட்சியினரையும், கொள்கையில் விருப்பில்லாதாரையும், வசைமொழியால் வருத்தப்படச்செய்யக்கூடாது. இதமாகஎடுத்துரைக்க வேண்டும்" என்று, அன்பர்சிலர் அறிவுரைபுகட்டுகின்றனர். குறிப்பாகத், தமிழர் என்ற உணர்ச்சியிலே தாம்யாருக்கும் இளைத்தவரல்ல என்று கூறிக்கொண்டு, தமிழரின் சமயசம்பந்தமான காரியங்களிலே, சுயமரியாதைக்காரர்கள் ஈடுபடுதல் கூடாது என்று எச்சரிக்கை செய்யும் ஒருகூட்டம் உண்டு. அவர்கள், தன்மான இயக்கத்தினர் கேட்கும் கேள்விகளுக்கு விடையிறுக்காமலும், எழுப்பும் சந்தேகங்கட்குத் தெளிவு தெரிவிக்காமலும், துடுக்குத்தனம்—பதட்டம்—வசைபேசுதல்—வம்புக்கு வருபவர்—என்ற சிலபல கூறிச்சிந்தாகுலராவதுடன், சினங்கொண்டும் விடுகின்றனர்.

நாயே—பேயே—என்று, பிறரை நாக்கொழுப்பினால் கடிந்துரைப்பது, தவறு என்பதை அறிவுத்துறையினை அணுகக் கருதும் எவரும் ஏற்றுக்கொள்வர். தன்மானத்தோழர்கள்பிறர்மனம்நோகவேண்டும்என்றநோக்கங்கொண்டவருமல்ல, நிந்தனையே சிந்தனையாகக்கொண்டு, வசை பேசுதலையே வாதமுறையாகக் கொண்டவருமல்ல. நெடுங்காலமாக நினைப்பிலே தழைத்துக்கிடந்த கொள்கைகளைத் தன்மானத்தோழர்கள் களைந்தெறியும் பணிபுரியும்போது, சிலபலருக்குக் கஷ்டமாகத் தான்இருக்கும். அவர்களுக்குத், தன்மான இயக்கத்தினரின் வாதம், வசையாகத் தெரிகிறது. உண்மை அதுவேயன்றி, வேறில்லை. மேலும், நாயே, பேயே என்றும், மூடா, காடா என்றும் கோபத்தினால் கக்குவது, தன்மான இயக்கத்தினரின் தனிச்சிறப்பென எக்காரணம் கொண்டும் எவரும் கூறமுடியாது. சீலர்களென்றும், மார்க்கபோதகரென்றும் மதியுபதேசகரென்றும் தங்களைக்கூறிக் கொள்பவரும், பிறரால் அங்ஙனமேகூறப்படுபவருமான, நாயன்மார்கள், ஆழ்வார்கள், குருமார்கள், புலவர்களாகியோர், தமது கருத்துக்கு மாறுபட்டவர்களைத் தூற்றியதும் விரட்டியதும், கோபித்துக் கொண்டதும் கொடுமை செய்ததும், சீறியதும் சித்திரவதை செய்ததும், இவ்வளவுஅவ்வளவென்று சொல்லமுடியாது! காதிலே கேட்கமுடியாது! அவ்வளவு அநியாயமாக இருக்கும், அந்த வசைமொழிகள். மார்க்கவிஷயத்திலே தம்முடையது உயர்ந்தது, பிறருடையமதம் இழிவானது என்று, ஒருவரையொருவர் பழித்துக் கொண்டதுடன், எவரெவருக்கு எங்கெங்கு ஆதரவு கிடைக்கிறதோ அங்கெல்லாம் மற்றமதத்தவரை மட்டந்தட்டுவதையே யகேஸ்வர பூஜையாகக்கொண்டிருந்த மகானுபாவர்களும், ஒருஅரசனிடமோ குறுநிலக்கொற்றவனிடமோ இருக்கஇடம்கிடைத்தால், அங்குவேறொருவன் நுழையக்கூடாதென்று, கட்டுக்காவல் ஏற்படுத்திக்கொண்டும், தப்பித்தவறி எவரேனும்—வருவாராயின் அவர்களை ஒழித்திடவே சளைக்காது உழைத்தபுலவர் சிகாமணிகளும், பேசியுள்ள வசைமொழிகள், எவ்வளவு! அவைகளை, இனிமை, அருமை, என்றுகூறி இன்றும்பலர் படித்திடவும் பார்க்கிறோம். அப்பாடல்களின் ஊடே ஊசலாடும், பொறாமை, பதட்டம், வெறுப்புமுதலியனவற்றைச்சற்றுகூர்ந்து நோக்கினால், வசைமொழியிலே தேர்ச்சி பெற்றவர்கள், தன்மான இயக்கத்தினரல்ல என்பது விளங்கும். மிகச்சாதாரண குற்றத்திற்குக்கூடச் சில புலவர்கள், கொதித்து வசைமொழிந்திருக்கின்றனர். செந்தமிழ்ச் செய்யுளாக இருப்பதால், அந்தத்தூற்றலையாரும் துருவிப்பார்த்து, இவ்வளவு ஆத்திரம் இப்புலவருக்கு, இவ்வளவு சிறுசெயலுக்குப் பிறக்கலாமா என்று யோசித்துப் பார்ப்பதில்லை.

பந்திநடக்கிறது ஓரிடத்திலே. உட்கார்ந்து உண்பவரிலே ஒருவருடைய குடுமிஅவிழ்ந்து, பக்கத்திருப்போரின் இலையிலேவிழுகிறது. பந்தியிலே முழுகவனத்தையும் செலுத்தியஅவன், அதைக் கவனிக்கவில்லை. என்னநடக்கும் அந்தச் சமயத்திலே, அவ்விடத்திலே? "சார்!" என்றுபாதிக்கப்பட்டவர்மெள்ள அழைப்பார். பாதகத்தைஉண்டாக்கியவர், நிலைமையைஉணர்ந்துகொண்டு, "அடடா! தெரியாமல் நேரிட்டுவிட்டது" என்று கூறிமுடிப்பதற்குள், குற்றம் சாட்டமுனைந்தவர், "பரவாயில்லை" என்றுகூறுவார். இது, பண்புள்ளவர்போக்கு.

அடுத்த "ரகம்" கொஞ்சம் கோபத்தோடு வேலைசெய்யும்.

"யாரப்பா இது. பக்கத்திலே பார்த்துச்சாப்பிடவேண்டாமோ?"

"பார்க்கவில்லை. பார்த்தால் இப்படி நேரிடவிடுவேனா. இதற்கு இவ்வளவு கோபமா?"

"கோபங்சொல்வது சரியில்லைஎன்று கூறத்தெரிகிறது, செய்தகாரியம் தவறு என்று அறியப்புத்திஇல்லையோ?"

"இவ்வளவு ஆத்திரங்கூடாது உங்களுக்கு"

"இவ்வளவு அவசரம் உமக்கு இருக்கக்கூடாது"

இதற்குள் மற்றவர்கள்பேசி ரசாபாசம் ஏற்படாதபடி தடுத்துவிடுவர்.

மட்டரகமாகஇருந்தால் பேச்சும் செயலும்வேறு போக்கிலேஇருக்கும்.

"மடையன்! பக்கத்திலே இருப்பவர், மனிதரென்று தெரியவில்லையோ?"

"மனிதனென்று எண்ணாமல், மாடு என்றுநினைத்தேன்"

"போக்கிரி! ஜாக்கிரதை!"

"போதும்நிறுத்து. என்னடா, ஏதோ தெரியாமல், இலையிலே ஒருமயிர்விழுந்துவிட்டதற்கு இப்படிக்குதிக்கிறாய். பந்தியிலே பத்துப்பேர் வருவார்கள், ஏதோ அவசரத்திலே, சந்தடியிலே சிலகுறை நேரிடும். இதற்குக்கூத்தாடுவதா?"

"உன்னைப்போன்ற முட்டாள் பயல்கள் வருகிறஇடமென்றுதெரிந்தால் நான் இங்கேவந்தே இருக்கமாட்டேன்"

"போடா, மடைப்பயலே! உன்யோக்யதை எனக்குத்தெரியாதா? வாழைமரம் கட்டியவாசற்படியிலே நாய்போல நிற்பாயே"

"நானா, நீயா? கழுத்தைப்பிடித்து நெட்டிவெளியே தள்ளினால்கூட வெளியேபோகமாட்டாயே நீ-உன் யோக்யதைக்கு உனக்குப்பந்தியிலே இடங்கொடுத்ததே தவறு"

பேச்சுமுற்றும், கைகலக்கும்!

(3ம் பக்கம் பார்க்க)

## கலியாணசுந்தரரே,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப் பலவகை உண்டல்லவா! ஒரு பெரும்புலவர் பந்தியிலே, இதுபோல நடந்தது. முன்குடுமிக்காரனொருவன் அவர் பக்கத்திலே அமர்ந்திருந்தான். சோறுநிலையிலே, அவனுடைய மயிர் அவிழ்ந்துவீழ்ந்தது. அவன் அதைக்கவனியாது, குடுமியைஉதறினான். புலவருக்குக் கோபம்பிறந்தது. புலவரை நீங்கள் எந்தரகத்திலே சேர்ப்பீர்கள்? பொறுமை, நிலைமையுணர்வு, பிழைபொறுத்தல் ஆகிய பண்புகள் புலவர்கட்கு அணிகலன்களன்றோ! அவர்கள், என்செய்வர், அச்சமயத்தில்! தன்மான இயக்கத்தோழர்கள் தாறுமாறுபேசுவர், தாங்கொணாச் சுடுசொல்உரைப்பர், தூற்றுவர், என்றெல்லாம் பேசுகிறார்களே அன்பர்கள், அவர்களை, இப்புலவர் எந்தரகத்திலே சேர்க்கப்படவேண்டியவராகத் தமது செய்யுளால் காட்டிக்கொள்கிறார் என்பதைத் தீர்மானித்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

குடுமிஅவிழ்ந்து, இலையிலே வீழ்ந்ததும், புலவர், பாடினார்,

“சுருக்கவிழ்ந்த முன்குடுமிச்
சோழியா, சோற்றுப்
பொருக்கெழுந்த வாயா,
புலையா, திருக்குடந்தை
நாயா, நரியா, உன்
நாய்முகமுஞ் சேய்வடிவுந்
தாயார்தான் கண்டிலளோதான்.”

நாயே! நரியே! நீசனே! என்று நிந்தித்தார் புலவர். எவ்வளவு தூற்றல்! எவ்வளவு கடுமையான வசைமொழி! எத்தகையவரால் பேசப்பட்டது! இதைப்போல, யாரையேனும் தன்மான இயக்கத்தார் தூற்றுகின்றனரா? சவையப்பநாயன் என்றவன், வசைகேட்டான். இம்மொழிபேசியவர், செந்தமிழ் வல்லவர், அந்தணாளர், காளமேகம்!! புலவரின்போக்கு, எவ்வண்ணமிருந்தது என்பதைப்பாரீர்.

காளமேகப்புலவர், நாயே, பேயே என்று நிந்தித்ததுமட்டுமல்ல, நான் எடுத்துக்காட்டவிரும்புவது. இவர் புலவர். புலவர்களின் புகலிடமாகவும், ஆண்டவனின் அருள்தங்குமிடமாகவும், மதிக்குமடமாகவும் நற்பண்பின் உறைவிடமாகவும் போற்றப்பட்டும் புகழப்பட்டும்வந்த நாயன்மார்கள், தாம்ஆதரித்த சைவசமயத்துக்குமாறுபாடான சமணர்களை இழித்தும் பழித்தும்பேசியிருப்பதைத்தான், இன்றும், இன்னிசையாக, ஆண்டவனின் அருள்சுரக்குமென்றெண்ணி அன்பர்கள் பாடுகின்றனர்.

“மறை வழக்கமில்லாத மாபாவிகள்”
“மதிகேடர்”
“பாழியுறை வேழநிகர் பாழ்அமணர்”
“மூடிய சீவரத்தார் முதுமட்டையர் மோட்டமணர்”
“பொய்யராம் அமணர்”
“எத்தராம் அமணர்”
“துட்டராம் அமணர்”
“குண்டராம் அமணர்”
“அறிவிலாத அமணர்”
“ஊத்தை வாய்ச் சமண்”
“சமண் பதகர் புத்தர்”
“நின்று துய்ப்பவர் நீசர்”
“மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்”

*        *        *        *

**மூடா! பாவி! மொட்டைத் தலையா, குட்டைமதியா! பொய்யா, புரட்டா! துஷ்டா! குண்டனே! அறிவற்றேனே! எத்தனே! ஊத்தை வாயனே!—**

கேண்மின் மெய்யன்பர்களே, இவை, திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய ஏசல்கள். சமணர், வேறுமதத்தவர் என்றதால் துவேஷம்கொண்டு, அவர்களைக் கண்டபடி வசைமொழியால் வாட்டினால் பொதுமக்கள், அவர்களின்மார்க்கத்தை வெறுப்பர், அவர்களையும்வெறுப்பர் என்பதற்காக, ஞானசம்பந்தர், இவ்வளவு வெகுண்டு, நற்பண்புடையவரின் நாவினின்றும் வரக்கூடாதவார்த்தைகளைக்கூறி இருக்கிறார். ஞானசம்பந்தர், பாலுண்டவாயர்! சாதாரணப்பால் அல்ல! தோடுடைய செவியன் விடைஏறி ஓர் தூவெண்மதிசூடி வந்தார், அம்மை பார்வதியார் அவருடன் வந்திருந்து, ஞானசம்பந்தருக்குப்பாலூட்டினார். பார்வதியாரிடம் பாலுண்ட வாயரின், பண்புஎப்படி இருந்தது பாருங்கள்!! வேறுமதத்தவரை வெறிகொண்டு தூற்றியிருப்பது சரியா, கூறுங்கள், இந்த முறையிலே சுயமரியாதைக்காரர்கள் வேறு எவரையேனும் என்றேனும் கண்டபடி பேசினதுண்டா என்பதையும் சிந்தித்து உரையுங்கள்.

இவ்விதமாக ஏசிப்பேசி, மக்களுக்குச் சமணர்களிடம் துவேஷம், பித்தம்போல் வளரும்படிச் செய்ததோடா நின்றனர்! இல்லையே! “வாதில் வென்றனர்” என்று கூறுவர் சைவர். வென்று என்ன செய்தனர்? 8000 சமணர்களைக் கழுவிலேற்றினர்!! அன்பே சிவம் என்று கூறும் அறிஞர்களின் அந்நாட் செயல்இது. இந்நாள் இதுநடைபெறாததற்குக் காரணம், ஆங்கிலச் சட்டதிட்டம் தடையாக இருப்பதே யன்றி, அவர்களின் மனம் திரு. வி. க. வின் நெஞ்சம்போல, விரிந்துவிட்டதனால் அல்ல! இத்தகைய அன்பர்களே, தன்மான இயக்கத் தோழர்கள், கண்டபடி பேசுகின்றனர் என்றகுறை கூறுகின்றனர். என்னே இவரின் நினைப்பின் நிலைமை!

உண்மையிலே இவர்கள், அக்காலச் சைவர்கள் சமணர்களைப் படுத்தியகொடுமைக்குக் கழுவாய்தேட முற்படல் அறிவுடைமையாகும். ஏடுகளிலிருந்து, தூற்றல் பதங்களை அகற்றவேண்டும். கழுவிலேற்றிய காதையைப் படிக்கும் பழக்கத்தை நிறுத்தவேண்டும். சம்பந்தர் சரிதை, அப்பர் பெருமை என்று பேசும்போது, சமணத்தைத் தூற்றும் காரியம் செய்கிறார்களே, அதைநிறுத்தவேண்டும். கழுவேற்றியதைக் காட்டும் சித்திரம் இருக்கிறதே மதுரைக் கோயிலிலே அதை அழிக்கவேண்டும். மதுரையிலே இந்தக் கழுவேற்றும் திருவிழா நடத்தப்படுவதைத்தடுக்கவேண்டும். நெல்லையிலே கழுவேற்றிய கதையை கவனமூட்டுவதற்காகத் தெருவுக்கு அக்கருத்துள்ள பெயர் இடப்பட்டிருப்பதை மாற்றவேண்டும். எம்மதமும் சம்மதம் என்று பேசிடும் திரு. வி. க. இக்காரியங்கட்குத் தமது நேரத்தையும் நினைப்பையும் செலவிடுவது முறையாகுமேயன்றி, என்கண்களுக்கு நபியும்ஒன்றே நாயன்மார்களும் ஒன்றே, அரியும் அரனும் ஒன்றே, சைவமும் ஜைனமும் ஒன்றே என்று சிறப்புக்கூட்டங்களிலே கூறிவிட்டுச், சிவசிவா என்று இருந்துவிடுவது சரியாகாது. எல்லாம் ஒன்றுபோல் தெரிவது, பண்பு என்று பலர் கூறக்கேட்டிருக்கிறேன். எதிலும் இலயிக்காத நிலையும், எதையும் கண்டிக்கத் தீரமில்லாத்தன்மையும், எதுஎப்படி இருந்தால் என்னஎன்ற அசிரத்தையும், எதைச் சொன்னால் என்ன சங்கடம் விளையுமோ என்ற பயமும், எதையும் ஒரேவிதமாகக் காண்கிறேன், என்று சிலரைக்கூறவைக்கிறது. இது பண்பு அல்ல! நெஞ்சிலேஉரம் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு. பித்தனுக்கும் குடியனுக்கும், எல்லாப்பொருளும் ஒன்றாகவே தென்படுகிறது. சிலசமயங்களில் ஒன்று மற்றொன்றாகத் தோன்றுவதுமுண்டு. இந்நிலை புகழ்ச்சிக்குரியதுமல்ல அவர் பெற்ற பேறு யான்பெற வேண்டுகிறேன் என்று இறைவனை இறைஞ்சிப்பெறவேண்டியதுமல்ல என்பதை அன்பர் குழாத்துக்குக்கூறுகிறேன்.

---

## ‘திராவிட நாடு’

### இரண்டாம்ஆண்டு நிறைவுவிழா.

மேற்படிவிழா, 20-ந்தேதி மாலை K. S. முனுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது, தேநீர் விருந்துக்குப் பிறகு நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில், பங்கீடு அலுவலர் தோழர் இராமலிங்கர், வித்வான் வேணுகோபாலர், தோழர்கள் காந்திமதிநாதன், அ. பொன்னம்பலனார், T. P. S. பொன்னப்பா ஆகியோர் பேசினர். தோழர் C. N. A. நன்றிகூறினார். இரவு தோழர் கோவிந்தராஜன் பாரதிதாசன் பாடல்களை, தோழர் குப்புசாமி பிடில், பொன்னப்பா மிருதங்கம், சிவக்கொழுந்து கஞ்சிரா, கொண்டபக்கவாத்தியங்களுடன் பாடினார்.

திராவிட நாடு

காஞ்சி 26—3—44 ஞாயிறு

# ஆம்! கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும்!

"காரசாரமான வார்த்தைகள்! கடுமையான கண்டனம்! வேகமாக, கோபமாகத்தான் பேசியிருக்கிறார்கள். ஆனால், என்போன்ற இந்துக்கள், பொறுமையுடன், அந்தக் கண்டனத்தைக் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்"—என்று, டில்லி சட்டசபையிலே, சர் இராமசாமி முதலியார் கூறினர். பழங்குடிமக்கள் படும் துயரத்தை எடுத்துக்கூறியும், அவர்களின் விடுதலைக்கு வழிவகுக்குமாறு சர்க்காரை வற்புறுத்தியும், புதிய உலக அமைப்பின் திட்டங்கள் தீட்டும்போது, பழங்குடிமக்களின் நலனுக்கேற்றவைகளைச் சேர்க்கும்படியும், தோழர் சிவராஜ், பேசினர். அவரை ஆதரித்துப் பலர் பேசினர்.

தீண்டாதார் என்று திமிர்வாதக்காரரால் அழைக்கப்படும், பழங்குடிமக்களின் நலனைக்குறித்துச், சட்டசபைகளும்பாராளும் மன்றங்களும் அதிகமாகக் கவனம் செலுத்துவதில்லை. பத்தாயிரம் கோடி ரூபாய் திட்டமென்ன, தங்கத்துக்கும் நோட்டுக்கும் உள்ள தொடர்புபற்றிய விவாதமென்ன, வியாபார சம்பந்தமான விஷயங்களென்ன, வைசிராய் நிர்வாகசபையின் உயிரைப் பற்றிய ஆருடங்கள் என்ன, இவை போன்றவைகளிலே, தங்களின் கவனத்தைச் செலுத்துவதே சிறந்ததென்று கருதுவதும், நாட்டின் உயிர்நாடி நலிவதை மறப்பதும், வாடிக்கையாக இருந்துவந்தது. இதனை, நமது சிவராஜ் போக்கினர், தடித்த தோலருக்கும் சுரீல் என உறைக்கும்படி சரியான சவுக்கடி தந்தார். வைதீகங்களுக்கு வாட்டமாகத்தான் இருக்கும். வர்ணாஸ்ரமும் ஜாதிக்கொடுமையும், பழங்குடி மக்களைப் பாழ்செய்கிறது என்று ஒருவர்பேசினதை கேட்டு, அதே சட்டசபையிலே திருக்கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் ஓர் சனுதனி, தீண்டாதாரின் நிலைமையைச் சீராக்க வேண்டியதுதான், ஆனால் இவர்கள் ஜாதிமுறையைக் கண்டித்துப் பேசியது என்போன்றுருக்கு மிக்கவருத்தத்தைக் கொடுக்கிறது என்று கூறினாராம். அவருடைய பேச்சைக்கொண்டு தான் நாம் அவரைக் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கிறார், என்று கூறினோம், அந்த உருவம், கன்னெஞ்சம் படைத்தது என்பதுவிளங்குவதால்! நாட்டைத்தீண்டாட வைப்பவரைக் கொண்டாடித் துதிக்கும் கோணற்குணாளர்களுக்கு, பழங்குடிமக்களின் பரிதாபத்துக்குரிய நிலைக்குக் காரணம், பாழான ஜாதிமுறைதான், என்ற உண்மை, மனவேதனையைத்தான் உண்டாக்கும், பிடிபட்ட கள்ளன் உதைபட்டு அலறுவது போல, அவர்கள் கூவித்தான் கிடப்பார்கள். நாம் சிவராஜ் அவர்கள் சிறப்பேசினதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம், இது போல இடித்துரைகள் அடிக்கடி அந்த மன்றங்களிலே நிகழத்தான் வேண்டும். நெடுநாளைய நோய், தீண்டாமை. அதை நீக்கக் காரமான மருந்துதேவை. புண்ணின்மீது பனிநீர் தெளிப்பது பயன் தராது, பரிமளம் பத்தேவிநாடியில்போய் விடும், புண்போகாது. பழங்குடி மக்களை ஜாதிபடுத்திவரும்பாடு,இன்றும்குறைந்து விட்டது என்று நேர்மையில்விருப்பமுள்ளவர் எவரும் கூறமுடியாது. குறைக்க முயற்சி நடக்கிறது என்றுகூறலாம், குறைவதுபோலத்தெரிகிறது என்று சொல்லலாம், அதற்குமேல் கூறல்மிகையாகும். "ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளைப் பற்றி அண்டம் அதிரப் பேசினீர்களே, எங்கள் பழங்குடிமக்களை, ஜாதி இந்துக்களாகிய நீங்கள் படுத்தும்பாடு, பற்றி எண்ணிப் பார்த்தீர்களா?" என்று கன்னத்தில் அறைந்ததுபோலக் கேட்டார், பழங்குடிமக்களின் பாதுகாவலர் ஒருவர்.

இவ்விதமான காரசாரமான கண்டனங்களைக்கேட்டுக் கனபாடிகள் கொதித்திருப்பர். சர். இராமசாமி முதலியார், கோபங்கொள்ளவில்லை. சர்க்கார் பழங்குடிமக்களின் துயர்போக்க முனைவர் என்று உறுதிகூறிவிட்டு, இது காறும் பழங்குடிமக்களை இந்துமதமும் அதன் விளைவான ஜாதியும் படுத்தியபாடு அதிகம். அந்தக்கொடுமையைச் செய்ததற்காக இதுவும் கேட்கவேண்டியதுதான் இதற்குமேலும் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான், என்ற விதமாகப்பேசிஇருக்கிறார். ஆம்! கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். பழங்குடி மக்களை ஜாதி இந்துக்கள்கொடுமைப்படுத்தியதற்குப்,பழங்குடிமக்கள் சொல்லம்பு தொடுத்தநோடு நின்றனரே என்பதற்காக அவர்களின் பொறுமைக் குணத்திற்கும் பண்புக்கும் பாராட்டுவதோடு வணக்கஞ்செலுத்தவும் ஜாதி இந்துக்கள் கடமைப்பட்டவர்களே என்றும் கூறுவோம். உலகிலே வேறுஎங்கும், பலசாலிகளைப்பலவீனர்கள்அடிமைகளாக்கியதில்லை, பாடுபடும் இனத்தைப் பாரியாக்கி அதனைப் பாவம், புண்யம் என்றுகூறித்தப்பித்துக் கொண்டதில்லை. பலகோடிமக்களாக உள்ள பழங்குடிமக்களை இந்தப் 'புண்யபூமி' யில் தான். மதத்தின்பெயரால் அடக்கி ஒடுக்கினர். இக்கொடுஞ்செயலுக்காக, வெட்கித்தலை குனியத்தான் வேண்டும், துக்கத்தால் இரத்தக்கண்ணீர் வடிக்கத்தான் வேண்டும். ஆம்! ஆனல் அதுமட்டும் போதாது, எந்தவருணாஸ்ரமும் ஜாதிபேதமும், அந்தப் பழங்குடி மக்களை இவ்வளவு கேவலமான நிலைமைக்குக் கொண்டுவந்ததோ, அந்த வர்ணாஸ்ரமத்தையும் அதன் பிறப்பிடமான ஆரியத்தையும் அழிக்கத்துணிவு கொள்ள வேண்டும். ஈரமும் வேண்டும், வீரமும் வேண்டும். பழங்குடி மக்கள்படு துயர்கண்டு நெஞ்சிலே ஈரம் தோன்ற வேண்டும், அவர்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்த இந்துமத ஏகாதிபத்திய இறுமாப்பாளர்களை எதிர்க்கவீரம்வேண்டும். அதுதான் அறப்போர்! அந்த அறப்போருக்கேற்ற ஆற்றல் பிறக்க வேண்டுமானல் சர். இராமசாமி முதலியார் கூறியதுபோல "என்னைப்போன்ற இந்துக்கள்" என்றுபேசி, இந்துப்பட்டியிலே இடந்தேடிக்கொண்டு பயனில்லை. நான் ஓர் திராவிடன், ஆரியத்தால் [illegible]ப்பட்ட, அதனல் உருமாறிய, உணர்ச்சி குன்றிய, திராவிடன். பழங்குடி [illegible], ஆரிய சக்கரவால், [illegible]தார், எனவே நம்மிலும் மேலா[illegible], அவர்களின் கூட்டுறவால் திராவிடத்தைத் தழைக்கச் செய்வேன், [illegible] உரைத்து திராவிடஇன எழுச்சிக்குப் பாடுபட வேண்டும். பரி[illegible] பழங்குடி மக்கள், வே[illegible], நமது இனத்தவர், திராவிடர்!!

## சௌ—சௌ!

இதிலேகொஞ்சம் அதிலேகொஞ்சம், இனிப்புக்கொஞ்சம்காரம்கொஞ்சம்,பட்டாணி பயறுகடலையுடன்பாதாம்பருப்பும் கலந்து சினிசிறிதளவு தூவிப்பலவற்றைக் கொட்டிக் கலக்கித்தருகின்றனரே, பண்டம், சௌ-சௌ, (சவ்-சவ்) அதுபோல இந்தியாவெனும் பூபாகத்திலே, ஒருகூட்டம், நடமாடும் சௌ-சௌவாக இருக்கிறது. ஒரேஇரவில்குலேபகாவலியில் ஒரு பாகம், சதாரத்திலே ஒருசம்பவம், தூக்குத் தூக்கியிலே ஒருபகுதி, என்றுபல வற்றை ஒன்றன்பின் ஒன்றாக நடித்துக் காட்டுவது நாடகத்துறையிலே சௌ-சௌ என்றுபெயரிடப்பட்டிருக்கிறது.

டாக்டர் அம்பேத்கார், பொதுவாழ்விலே ஈடுபட்டுள்ள சௌ—சௌகளை நாட்டுக்கு அறிமுகப்படுத்திஇருக்கிறார்!

சென்றகிழமை, டில்லி சட்டசபையிலே, பேசியஒரு அங்கத்தினர், தொழிலாளர்களின் தலைவர்களைச் சர்க்கார் சிறையிலிருந்து ஏன் விடுதலைசெய்யக் கூடாது? என்றுகேள்விகேட்டார். அப்போது டாக்டர் அம்பேத்கார், அந்தத் தொழிலாளர் தலைவர்களின்நிலைமையை, நகைச்சுவைததும்ப எடுத்துரைத்தார். "இந்தத் தொழிலாளர் தலைவர்கள், சில சமயம் தொழிலாளர் தலைவர்களாகக் காட்சிஅளிக்கின்றனர், சிலவேளைகளிலே பொதுஉடைமைப் புலிகளெனக்காட்சி தருகின்றனர், மற்றும்சில சமயங்களிலே தேசியத்தலைவர்களென்று நடமாடுகின்றனர், காங்கிரஸ்காரராகக் காட்சிதருவதொருசமயம், இந்துமகாசபைக்காரராகஒரு வேளைகாட்சிதருகின்றனர், இப்படிச் சௌ—சௌ தலைவர்களாக இருக்கிறார்களே, இந்தத் தோழர்கள், இவர்களின்

எந்தவேடத்தின்போது நடத்தப்பட்ட குற்றத்துக்காக இவர்களைச் சிறையிலிட்டனர் என்பதை ஆராய்ந்தறிவதே கஷ்டமாகஇருக்கிறது" என்று, கூறிவிட்டு, "இந்தத் தொழிலாளர் தலைவர்கள்தொழிலாளர்களின் விஷயத்தில் அக்கரைகாட்டுவதோடுநின்றால், தொழிலாளர்உலகு சீர்படும்," என்றபுத்திமதியும் கூறினர்.

உண்மையிலேயே, தொழிலாளர் தலைவர்களெனநடமாடும் தோழர்கள், பஜனைக்கூடத்துமணியடிக்கும் திருப்பணியையும்செய்வர், மாஸ்கோவுக்கு மார்க்கம்கூறும்வழிகாட்டிகள்என்றும் வாயுரை வீசுவர், காந்தீயத்துக்கும் சமதர்மத்துக்கும் பாம்புக்கும் கீரிக்கும்போன்ற தொடர்பு என்றுபேசும் தத்துவவிளக்க போதகராகவுமிருப்பர், காந்தீயத்துக்குக் காவடிதூக்கும் பக்தராகவும் உலவுவர், தேசியத்துக்கும் சமதர்மத்துக்கும் முரண்பாடு உண்டென மொழிவர், போலித் தேசியத்தினைக் கண்டிப்பவர்களோடும் சாய்ந்து, தேர்தலின்போது காங்கிரசுக்கு முன்னேறும்பிள்ளைகளாவர், பதவியிலே காங்கிரஸ் அமர்ந்தால், அதன்பில்லைச் சேவகத்துக்கு மனுச்செய்வர், அவர்கள் பேசாதகொள்கையில்லை, பிடிக்காதபிரச்சினை இல்லை, பலவேஷர்களாகஇருந்து, நாடகமாடிவருகின்றனர். இதனை டாக்டர் அம்பேத்கார் அழகுறஎடுத்துக்கூறியதுடன், ஒன்றேசெய்க ஒன்றேசெய்க, அதைநன்றாய்ச்செய்க இன்றேசெய்க என்று அறிவுபுகட்டியுமிருக்கிறார். ஆனால் இந்தச் செள—செளபேர்வழிகள், திருந்துவர் என்றுயாரும் நம்பிவிடாதீர்கள், இப்படிப்பலநாடகமாடுவதால் அவர்களுக்கு இலாபம்இருக்கிறது, அதைஎப்படி அவர்கள் விட்டுவிடமுடியும்!

## செல்வம் நினைவுநாள்.

பெரியகாஞ்சிபுரம், வன்னியர் சத்திர எதிரில், 19ந்-தேதி மாலை, தோழர் அ. க. தங்கவேலர் தலைமையில், செல்வம்நினைவு நாள் சிறப்புறநடந்தேறியது. கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டு, பந்தலிடப்பட்டிருந்தது. பாரதிதாசன் பாடல்களைத் தோழர் கோவிந்தராஜன் பாடினர். செல்வத்தின் சிறந்த குணங்களைப் பற்றியும் அவர் ஆதரித்தகொள்கைகளைப் பற்றியும், தோழர்கள் C.V.M. அண்ணாமலை, அழகத்தடிகள், வெங்கடராமன், அ. பொன்னம்பலனர், டாக்டர் குப்புசாமி, அண்ணாத்துரை ஆகியோர் விளக்கிப் பேசினர்.

## மணிபுரியில் மாற்றார்.

ஜப்பானியர்கள், மணிபுரிசமஸ்தானத்தில் இரண்டோர் இடங்களில் நுழைந்துவிட்டனரென்றும், நமது படைகளுடன்போராடுகின்றனர்என்றும் தெரிகிறது. இந்தியநிலத்திலே எதிரி காலடிவைத்திருக்கிறான், ஆனல் கவலை வேண்டாம், எதிரியால் இனிஒன்றும் இயலாது, என்றுஇந்திய சேனாதிபதி உறுதி கூறுகிறார்.

# ★ பண்டமாற்று! ★

உங்களுக்குத் தேவையான சரக்கு நான் தருகிறேன், எனக்குத் தேவையான சரக்கு தாங்கள் தரவேண்டும்—என்று கூறி, பேரம்முடிக்கும் பண்டமாற்று முறை, வியாபாரிகளிடம் உண்டு. முத்துக்குத்தங்கம், பச்சைக்குப்பசும்பொன், சந்தனத்துக்குப்பட்டு, என்று பலப்பல உண்டு பண்டமாற்றுவகை.

சிலநாட்களுக்கு முன்பு, அகிலஇந்திய வியாபாரச்சங்கச் சம்மேளனம் நடைபெற்றது. அதிலே, நமது சர். குமாரராஜா அவர்கள் தலைமைவகித்தார். சர்க்காரின் போக்கை—பொருளாதாரத்திட்ட விஷயமாக அவர்கள் கொண்டுள்ள மனப்பான்மையைப்—பலமாகக் கண்டித்தார். தொழில் வளர்ச்சிக்குச் சர்க்கார் தோள் கொடுக்கவேண்டும் என்று கூறினர். வெளிநாடு, இந்தியாவுக்குத் தரவேண்டிய கடன்தொகைக்குஈடாக, தொழில்வளர்ச்சிக்கான கருவிகளை அனுப்பவேண்டும், பஞ்சத்தைத்தடுக்க உணவுப்பொருளை அனுப்பவேண்டும்அதைவிட்டுக்குடிவகைகளும், போகப்பொருள்களும் கொண்டுவந்து குவிப்பது அடாதசெயல் என்று கண்டித்துக்கூறினர். நாம்மிக்க மகிழ்ச்சியோடும், பெருமையோடும், இந்தப்பகுதியை ஆதரிக்கிறோம். நாம் ஆச்சரியமடைந்தது, இந்தப்பகுதியைப் படித்தல்ல! தேசீயத்தலைவர்களை விடுதலைசெய்யவேண்டும், தேசீய சர்க்கார் அமைக்கவேண்டும் என்று சர். குமாரராஜா பேசியிருப்பதைக்கண்டு நாம் ஆச்சரியப்பட்டோம். தலத்தின் மகிமையா, அதுபோது உடன் இருந்தவர்களின் உரமான உள்ளத்தின் வெற்றியின் விளைவா, என்று யோசிக்கலானோம். ஆகாகான் அரண்மனையிலே "அந்தத் தேசியத்" தலைவர்கள் அனுப்பப்பட்டு, திங்கள் பல சென்றபின், சர்குமாரராஜா கதவுதிறமின்என்று கட்டளைக்கலித்துறை பாடிடக்காரணமென்னவென்று புரிந்துகொள்ளமுடியவில்லை.'தேசியசர்க்கார்' சென்னையிலே இருந்தபோது, சர். குமாரராஜாவின் சகாக்கள் (அந்தஉறவு கொண்டாடுவதற்காக அவர் நம்மை மன்னிப்பார் என்றுநம்புகிறோம்) சிறையிலே அடைக்கப்பட்டதை அவர் அறிவாரே, இப்போது ஏன், தேசியசர்க்காரே, சர்வரோகநிவாரணி என்றுஎண்ணுகிறார், காரணம்என்ன, என்றுஆராய்ந்தோம்.நமக்கு ஆகாகான் மாளிகையிலே, அந்தத் தலைவர்கள் என்றென்றும் இருக்கவேண்டும் என்பது எண்ணமல்ல; ஆனல், அவர்கள் சிறையிலிருப்பதால், கெட்டித்த துப்பாக்கிவெடிக்காமற்போகுமோ, கடலிலே மிதக்கும் கலம்செல்லாமற்கரைதட்டுமோ, விண்ணிலேபறக்கும்விமானங்களின் சிறகுகள் அற்றுவிடுமோ, என்றசந்தேகமும் சஞ்சலமும் தோன்றியதுமில்லை, அவர்கள் வெளியேவந்துவிட்டால், பஞ்சமும்நோயும் பஞ்சாய்ப்பறக்கும், ரூபாய்க்குஐந்துபடிக்கு அரிசிகிடைக்கும், என்றபித்தமும்எழும்பினதில்லை. ஆகாகான் அரண்மனையிலே அவர்களை ஆங்கிலர் இருக்கச்செய்தது, ஆகஸ்ட்டுத்தீர்மானத்தால், அதாவது யுத்தமுயற்சிக்கு அவர்கள் ஊறுதேடியதால். இது நம்மைத்திடுக்கிடச்செய்யவில்லை. யுத்தம்நடக்கும்நேரத்தில், இரண்டு மூர்க்கத்தனமான வல்லரசுகள், கருவிகள்பலவற்றுடன் வஞ்சனையெனும் கொடியகருவியையும்கொண்டு, பாதுகாப்பற்றபிரதேசங்களைப் பாழாக்கும் இந்தநேரத்தில், இந்தியாவிலேஓடும் இரயிலைக்கவிழ்ப்பதும், தபால்நிலையத்திலே தீயிடுவதுமான காரியம்செய்வது யுத்தமுயற்சிக்குக் கேடுவிளைவிக்கத்தான்செய்யும், அத்தகையகேட்டை விளைவிக்கும் செயல்புரிவோரைத் தடுக்கத்தான்எந்தத்துரைத்தனமும் எண்ணும். இந்திஒழிக! என்ற கூச்சலால், நாடுநாசமாகும் என்று எண்ணிடவும், கையில்கிடைத்ததைக் கொண்டு அடிப்பேன் என்றுபேசிடவும், கண்ணன் காட்டியவழியிலே நடக்கும் ஆச்சாரியாருக்குத்துணிவு பிறந்ததென்றால், வல்லரசுகளைச்சமைத்து, வலிமையை ஆதாரமாகக்காட்டிவாழும் பிரிட்டிஷாருக்குப், போரின்போக்கைக்கெடுக்கக்கூடிய காரியம்புரிவோரைச் சிறையிலிடத்தைரியத்துக்குப்பஞ்சமா இருக்கும்! மொழிப்போரிலே முனிவர்குலத்துதித்த, மகாத்துமாவின் குடும்பத்திலே சம்பந்தம்கொண்ட, உபநிஷத்துகளின் உண்மையைஉணர்ந்த உத்தமருக்கு, ஆயிரம்பேரைச் சிறையிலேதள்ளும் நெஞ்சழுத்தம் ஏற்பட்டதைக்கண்ட நமதுகண்களுக்கு, ஒருஏகாதிபத்திய சர்க்கார், தன்னை நெருக்கடியான நேரத்திலே இடுக்கியிலேபோடக்கிளம்பிய கூட்டத்தைக்கொட்டடியில் பூட்டியது, திகைப்பை உண்டாக்கவில்லை. சிறையும் நமக்குத்தெரிந்த இடந்தான்! ஆகாகான் மாளிகையிலேஉள்ள தேசியத்தலைவர்களுக்காகத் திங்களொன்றுக்குச் சர்க்கார் செலவிடும்தொகையும் தெரிவித்தனர், 500 ரூபாயாம்! இந்நிலையிலே நமக்கு, இந்தத்தலைவர்களின் விடுதலைகுறித்தும், இவர்கள்பேசும் தேசியசர்க்கார்பற்றியும் சர். குமாரராஜாவின்மனம் இலயித்ததன் காரணம் விளங்கவில்லை. இந்தப்பிரச்

(6 ம் பக்கம் பார்க்க)

## பண்டமாற்று.

5ம் பக்கத் தொடர்ச்சி.

னையை அவர்பேசவேண்டிய அவசியந்தான் என்னவென்றும் நமக்குத்தெளிவாகவில்லை.

“தேசீய”ப் பத்திரிகைகள், நமது குமாரராஜாவைப்பாராட்டின, வசிஷ்டர் வாயாலே பிரம்மரிஷிப்பட்டம் வாங்குவது என்று புராணீகர்கள் கூறுவார்களே அதுபோல. தேசியசர்க்கார்வேண்டும், தேசியத்தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும்என்று பேசுபவரிடம் தேசியத்தாட்களுக்கு அன்புசுரப்பது சகஜந்தான். வடநாட்டு வியாபாரக்கோமான்களும், தொழிற்சீமான்களும், சதாசர்வகாலமும் மனனம்செய்யும், இருமந்திரங்களுக்குக் குமாரராஜா அவர்களின் ததாஸ்து கிடைத்ததனால், என்னபலன், என்று துருவித் துருவிப்பார்த்ததில், ஒன்று தென்படுகிறது, உருவான பலன்அல்ல, உருவாகவேண்டியபலன். ஆனால்யாருக்கு அதுபலன்? என்பதுபலமான விவாதத்திற்குரிய பிரச்னை. யாதுஅது? பர்மா, ஜப்பானியரிடமிருந்து திருப்பிப்பிடிக்கப்பட்டபிறகு, அதன் புனருத்தாரணம் நடக்குமல்லவா, அந்தச்சமயத்திலே,நமது உரிமைகள், நமது நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும், பர்மாவில்! பர்மாவின் புனரமைப்பின்போது நமது அபிப்பிராயம் என்னவென்று சர்க்கார் தெரிந்துநடக்க வேண்டும். சுதந்திரபர்மாவில், நமக்கும் சர்வசுதந்திரமும் பாத்யதையும் இருக்க வேண்டும், என்ற கருத்துள்ள தீர்மானம் மேற்படி சம்மேளனத்திலேநிறைவேற்றப்பட்டது. பர்மாவிலே நமக்குப்பாத்யதைகளும், உரிமைகளும், நலன்களும்கிடைக்கும், இதற்கு அந்தச்சம்மேளனம் இணங்கியபோது அதன்ஜொலிக்கும் மணிகள் சதாஜெபிக்கும், தேசியத்தலைவர்கள்விடுதலை, தேசியசர்க்கார் அமைப்பு எனும் மந்திரத்திற்கு நமது ஆதரவைத்தந்தால் என்ன,பண்டமாற்றுப்போன்றதுதானே, என்று கருதிப்போலும், குமாரராஜா, அன்று அங்கு அப்படிப்பேசியது! பரலோகத்திலே சுகம்பெற இகத்திலே துன்பம் அனுபவிப்பதுபோல, பர்மாவிலே இன்பம்பெற, இங்கு தேசியசர்க்காராலே நாம் செக்குமாடானாலும் குற்றமில்லை, என்று குமாரராஜா கருதுகிறார் போலும். ஆனால் திராவிடத்தின் கருத்து அதுவல்ல என்பதைத் தெரிவிக்கவிரும்புகிறோம். **பர்மா பர்மியருக்கே! திராவிட நாடு திராவிடருக்கே!!** பர்மாவிலே திராவிடத்தின்கொடி பறக்கவும்வேண்டாம். பண்டத்துக்கோ பண்புக்கோ அங்கு சென்று திராவிடன் கடைதிறக்கவும் வேண்டாம், திராவிடத்திலே, மார்வாரி மண்டலாதிபதிகள் கொடிகட்டி ஆண்டிடவும்வேண்டாம். திராவிடனுக்குத் திராவிடநாடுபோதும். அங்கு உரிமைகளும் நலன்களுக்குப் பாதுகாப்பும், ஆட்சி அமைப்பிலேபங்கும், இருந்தால்போதும், திரைகடல் கடந்துசென்று, பர்மியரின் நலனைக்காப்பாற்றும் நற்பணி என்று பெயரிட்டாலும் சரியே, திரைகடலோடியும் திரவியம்தேடு என்றபெயரால் கூறினும் சரியே, அந்தக்காரியம் அவசியமானதல்ல. பர்மாவிலே பல்லக்கில்சவாரி செய்யத் திராவிடன்போகும் உரிமை பெறத் திராவிடத்திலே அவன் பல்லக்குத்தூக்குவோனாக இருக்கவேண்டுமா! பர்மாவில் புனருத்தாரணத்திலே இந்தியருக்கு உரிமைஉண்டு என்றுதீர்மானம் இருப்பதால், இந்தியர், என்றபட்டியில் திராவிடர் சேர்ந்துதானே, அந்த மகத்தான பலனைப்பெறமுடியும் என்றுவாதிடுவது முறையாகாது. பர்மாவைப் பர்மியர்பார்த்துக்கொள்ளட்டும். அப்படித்தான், யாருக்குபர்மா, இதற்குமுன்பு பெரியபலனைக் கொடுத்துவிட்டது? திராவிடன்,தனதுதரித்திரத்தால்மட்டும்அல்ல, தன்நாடு மற்றவரின் வேட்டைக்காடாகிவிட்டதால், பிறந்தஇடத்தில் பிழைக்க வகையற்று, அழுதகண்ணீரைத்துடைக்கவும் நேரமின்றிக், கப்பல்தட்டிலே நின்றுகொண்டு, கதறும் மனைவிக்கும், பயத்தால் பதறும் பெற்றோருக்கும், கரைசேர்ந்ததும் காகிதம்போடுகிறேன்என்று கூறிவிட்டு, வறுமைக்கடலைக் கடக்கத்தானே இந்த அலைகடலைக்கடக்கிறோம் என்று வாடி, பர்மாவில் வேலைதேடி, ரப்பர் தோட்டத்திலே ஓடி அலைந்தான், இந்த “உரிமையும் நலனும்” பாதுகாக்கப்பட்டால்என்ன, பாதுகாக்கப்படாமல்போய்விட்டாலென்ன! பர்மாவிலே சென்றவர்கள்யாவருமா, நமது நாட்டுக் கோட்டை தனவணிகர்போல வட்டிக்கடைதிறந்தனர்? பர்மாசென்று, பாட்டாளியாகவாழ, உரிமைகேட்பதைவிட, திராவிடத்திலே உரிமையாளனாக வாழத்தான் இனித்தமிழ்மகன் தீர்மானிப்பான். எனவே, பர்மாவிலே நமக்கு உரிமை கிடைக்க, வடநாட்டு வியாபாரவேந்தர்கள், பெரியமனதுவைத்தனர், என்று கருதிடுவது பொருத்தமில்லை. இந்தப் பண்டமாற்று, திராவிடமக்களுக்கு ஒரு பலனும்தராது.

ஆகவே, சர். குமாரராஜா, திராவிடத்தின் தனியுரிமையைவற்புறுத்தாது, திராவிடத்தொழில் வளர்ச்சிக்குத் திட்டம் வகுத்துப்பேசிடாது, தேசியத்தலைவர்கள் விடுதலை, தேசியசர்க்கார்அமைப்பு என்ற சர்க்காசிந்து பாடியதுகாண வருந்துகிறோம்.

——

## மறைவு.

சென்னையில் “திராவிடநாடு” பத்திரிகை ஏஜண்ட்டாகஇருந்த தோழர் S. V. குப்புசாமி அவர்கள் திங்கட்கிழமை இரவு 2-மணிக்கு இயற்கைஎய்தினார். அவரின் குடும்பத்தாருக்கு நமதுஅனுதாபம் உரித்தாகுக.

## இதோ ஒரு மேதாவி!

இன்றையஉலகிலே மேதாவி யார்? என்றுஅறியப்பலர் அவாக்கொண்டுள்ளனர் என்றுஎண்ணினார்போலும், ஆப்பிரிக்கநாட்டு அரசியல் தலைவர் ஒருவர், தமது மேதாவித்தனத்தை மேதினி தெரிந்துகொள்ளவேண்டுமென்று கருதி, அருமையான ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். ஐயர்லாந்துத் தலைவர் திவேலரா, அச்சுக்கூட்டுறவைஅகற்ற மறுத்துவருகிறார், அதனால் நேசநாடுகள் ஐயர்லாந்துடன் தொடர்புவைத்துக் கொள்ளமுடியாதென்று கூறுகின்றன. ஆப்பிரிக்காமேதாவி, ஐயர்லாந்து தீரருக்கு ஆசிச்செய்தி அனுப்பினாராம். இந்தப் புத்திசாலித்தனத்தோடு அவர் திருப்திபெறவில்லை. அபூர்வமான மூளையிலேஉதித்த அருமையான கருத்தையும் கக்கியிருக்கிறார்.

“பாலைக்கீழே கொட்டிவிடப்போகிறேன்” என்றுகோபமாகக் கூறினான் கோணல்புத்திக்கோபாலன். “ஏனடா பாலைப்பாழாக்க நினைக்கிறாய்” என்று கேட்டான் பலராமன். கோபாலன் “என் தெரியுமா பாலைக்கீழே கொட்டவேண்டுமென்றுகூறுகிறேன், அந்தப்பாலைத்தந்த பசுமாடு என்னைவாலால்அடித்தது” என்றானாம். இந்தக் கோணல்புத்திக் கோபாலனுக்கு, ஆப்பிரிக்க மேதாவி மாலன், அண்ணனாகவேண்டும், தெளிவுஅவ்வளவு இருக்கிறது.

“இன்றையப் போரிலே, நேசநாடுகள் வெற்றிபெறுவது ரஷியாவுடன் கலந்துறவாடுவதன்மூலமாகத்தான் என்றாகி, இதன் பயனாக உலகிலே பொதுவுடைமைபரவி, தென்ஆப்பிரிக்காவுக்கும்பரவுவதாக இருக்குமானால், ஜெர்மனி வெற்றிபெறுவதனால் பொதுஉடைமை முறியடிக்கப்படுமானால், நான் ஜெர்மனியே வெற்றிபெறவேண்டுமென்று விரும்புவேன்”? இதுதான் மேதாவிமாலனின்பேச்சு! எவ்வளவு பேதைமைபாருங்கள்! பொதுஉடைமை மீதுள்ளகோபம், ஜெர்மனி ஜெயிக்கவேண்டும்என்ற மோகத்தை ஊட்டுகிறது, மாலன்எனும் தென்ஆப்பிரிக்க அரசியல் தலைவனுக்கு! வாலால் என்னை அடித்ததால், அந்தப்பசுவின்பால் எனக்குவேண்டாம் என்று கூறின அறிவிலிக்கும், பொதுஉடைமை மீது வீணானதுவேஷங்கொண்டு மனப்பிராந்திஅடைந்து, அதனைத்தடுக்க ஜெர்மனி வெற்றிபெறட்டும் என்றுகூறும் மாலனுக்கும், நிலைமையில் வித்தியாசம் இருக்கிறதேயொழிய, மனஅமைப்பிலே அதிகமில்லைஎன்று எண்ணுகிறோம். இத்தகைய மதியிழந்த மேதாவிகளும், இன்றும் ஓரோரிடத்திலே இருக்கின்றனர், தமதுநாவை அசைக்கின்றனர், வெட்கமின்றி.

# தமிழன் எவருக்கும் தாழான்!

ஆம்! ஏன் தாழவேண்டும்? வாழ்ந்தறியாத வரட்டுத்தலையனு? வாழத்தெரியாத வம்பனு? இல்லையே! வளமார் எமது திராவிட நாடு, வாழ்க, வாழ்கவே என்றுபண்பாடி வாழ்ந்தான். இன்றே தாழ்ந்தான்! இந்தநிலைமாறத்தானேவேண்டும்.

குடந்தை மாவட்டத் திராவிட மாணவர் மாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர், மாணவத் தோழர் தவமணிராசன், தமிழன்ஏன் தாழ்ந்தான் என்பதை விளக்குகிருர், பிறகு இளைஞர் உலகின் எழுச்சியைக் காட்டுகிருர், தமிழன் எவருக்கும் தாழான்—தமிழன் எவரையும் தாழ்த்தான்! என்று சூள் உரைக்கிருர்.

**படியுங்கள், பாருங்கள் திராவிட மாணவஉலகின் மனப்பாங்கு மலர்ந்து மணம்வீசும் மாண்பினை!**

---

அறிவாற்றல் மிக்க தலைவரவர்களே! அன்பு கெழுமிய பெரியோர்களே! திராவிடத் தோன்றலாம் மாணவத் தோழர்களே! தமிழகத் தாய்மார்களே! திராவிட மாணவரின் மாவட்ட மாநாட்டு வரவேற்புக் கழகத்தின் சார்பாக முதற்கண் நுங்கள் அனைவரையும் வருகஎன்று வரவேற்று, நுங்கள்வரவு நல்வரவாகுகஎன்றுமகிழ்ந்து கூறி, வாழ்வினில் வாகைசூடிடுவோம் என்று உறுதிகூறுகிறேன்.

சங்ககாலத்தில் சோழநாட்டின் தங்கமும் வெள்ளியும்தங்கிய குடந்தையம்பதி, புராணகும்பேசுவரரின் கோலாகலமும் கோமளவல்லியின் குன்ருச்சிறப்பும் கும்பகோணமாகமாறுவதற்கு வழியானதன்றித், தென்னுட்டுப்பூனுவாகவும், திராவிடநாட்டின் ஆரியக்கோட்டையாகவும் இதனை அமைத்திருக்கின்றது என்றபோதிலும், இக்குடந்தையில் திராவிடர்கிளர்ச்சி மாணவர்களிடை மறுமலர்ச்சியும் தீவிர உணர்ச்சியையும் அரியமுயற்சியையும், ஏற்படுத்தியிருக்கிறதென்பது தென்னுட்டிலேயே முதலாவதாக இங்கு திராவிட மாணவர் மாநாடுகூடியிருப்பதிலிருந்து எளிதில் உணரக்கூடியதாகும். திராவிட நிலையினை எண்ணி எண்ணிஏங்கியநிலை மாறி, இன்று இக்காட்சியினைக்கண்டு இனி அவர்கட்குஉண்டு மீட்சிஎன்பதை உள்ளுந்தோறும், என்உள்ளம் உவகையடைகின்றது, நினைக்கும்தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது, மனம் மகிழ்கின்றது.

உள்ளபடியே இன்று, இங்கு மாணவர் மாநாடா? அது ஒரு வேடா? எடா இம்மடைத்தனம்? என்றுஒருசிலர்கடாவினர். விடை இதோ இங்கு குழுமியிருக்கும் காட்சிதான். சிறுவர்களின் மாநாடு சீரியமுறையிலே நடக்குமா சென்ருல் சிறப்புடன் திரும்புவோமா என்றுசிந்தித்து வாமுடியாதென வருத்தத்துடன் வரைந்துள்ளனர்; அவர்களுக்கு இனிநடக்கும் முறை நனிவிளக்கும். ஐயம் அகன்றிடும். மனம்வைத்தால் பணமின்றியும், சிலர் சினத்தையும்கருதாது, இரத்தவெள்ளத்தில் பிணம்மிதந்தாலும், கொண்டதைக் குறைவின்றி நிறைவேற்றியே தீருவர்என்பது, சரித்திரங்காட்டும் உண்மையாகும்; இளைஞருடையதேஎதிர்காலம் என்பதும் நாட்டின்ஆக்கம் மாணவஆக்கமே என்பதும் இளையோர்கூற்றல்ல; அறிஞரும் ஆற்றல்மிக்கோரும், முதியோரும் மொழிந்ததாகும்.

எங்களுடைய கழகத்தின் முக்கிய நோக்கமே புத்துலகச்சிற்பியாம் இளைஞரின் உள்ளத்தைச் செப்பனிடுவதேயாம். பழமையில்புரண்டு பாழாகாமலும், காலத்தின்வேகத்தில் கரிந்துவிடாமலும் புதுமையின் வித்தினில் புதைந்துவிடாமலும் மாணவரை மாண்புள்ளவராகவும், ஆற்றல்மிக்கவராகவும், ஒற்றுமைபற்றும், உலகப் பொதுநோக்கும் உடையவராகவும், தாய்மொழியாக்கம் நாடும் தறுகண்ணாளராகவும், திராவிட இனத்தின் தீவிர இளைஞர்களாகவும் ஆக்கவேண்டுமென்பதே எமது குறிக்கோளாகும். **தமிழன் எவருக்கும் தாழான், தமிழன் எவரையும் தாழ்த்தான்** என்பதே நமது வாழ்வின் பயனுகும். திராவிட நாட்டின் பற்பல பகுதியிலும், மணியென ஒளிரும் மாணவர்களைத் தமிழகத்தின் அணியென ஒரு மணிமாலையாய் அமைக்க வேண்டுமென்பதே நமது நோக்கமாகும்.

இனம் எழுச்சியுறவும், மக்கள் உணர்வு பெறவும், நாட்டின்ஆக்கம் பெருகவும், வாழ்வுவளம் பெருகவும், கழகங்கள் பல தேவை; உருவான இயக்கந்தேவை, தொண்டர்கள் பலர்தேவை, தளபதிகளும் தலைவரும் இன்றியமையாதவர். ஆகவேதான் இக்கழகத்தினையமைத்தோம், இனஎழுச்சியினை எண்ணி, எதிரியின் அழிவினையல்ல. எங்கள் உணர்ச்சி அவர்களுக்குக் கலக்கத்தையளிக்கலாம். அவர்களின் ஆட்சிக்கே அஞ்சாது எழுச்சிபெறும் இனம் இனி கலக்கத்தைக் கண்டு கலங்கி நிலைகுலைந்துவிடாது என்று நான்கூற ஆசைப்படுகிறேன். எங்களது கழகம் அரசியல் போராட்டத்திளுல் விளைந்ததல்ல. அரசியல் இயக்கத்தொடர்புடையதுமல்ல. ஆனல்இனஎழுச்சியும், மொழிவளர்ச்சியும், அரசியல் துணைகொண்டு அடக்கப்படமுடியும்என்று பிறர்முயல்வராளுல் எம்மைப்போராட்டக்கட்டத்தில் அவர்கள்கொண்டுநிறுத்தியவர்கள் ஆவார்களேதவிர அதன்விளைவிற்கு நாம் பொறுப்பாளிகளல்ல என்பதையும் நண்பர்களுக்குக் கூறுகிறேன்.

திராவிடர் கழகத்தின் ஆரம்பவிழாவிற்குத் தோழர் அண்ணுத்துரை என்பது கேட்டு அச்சங்கொண்ட பலரும் நச்சுமொழி பேசினரே தவிர, இளைஞரின் உலகத்தின் தளபதியாய், வாலிப உள்ளத்தின் கொதிப்பினை அனைவரும் அறியக் காட்டி ஆறுதல் ஏற்படத் துணைபுரிவர் என்பதை எண்ணிஞர்களில்லை. பரந்த அறிவினைக் காட்டும் விரிந்த நெற்றியும், ஆழ்ந்த கருத்தினைக்காட்டும் ஆய்ந்தஉரையும், நீண்ட அனுபவத்தினை வெளியிடும் தளர்ந்தமேனியும், வெண்தாடியும், உள்ளத்துறுதியை உருவகம் செய்ததொப்பதோர் உறுதியான தடியும், தலைமைக்கேற்றதோற்றமும் பெற்ற பெரியார் ஈ. வெ. ரா. தமிழரின் தனிப்பெருந்தலைவர், இன்று புரட்சியுணர்ச்சியின் ஓர் சின்னமாக உள்ளார். எனினும் அவர் இன்றேல் இன்றுள்ள அமைதி இருந்திடாது என்பதை அவர்கள் அறிந்தனரில்லை. ஆனுலும் அரசியல் தலைவர் என்பதற்காகவல்ல இளைஞராகிய நாங்கள்அவர்களைப் பின்பற்றுவது. கலைநிலை குலைந்துள்ளது கண்டு அந்நிலை மாறிடவும், வாழ்வுதாழ்வுற்றிடுவது நீங்கிடவும், இலக்கியம் இன்பப்பூங்காவாக மாறிடவும், அறிவுபெருகிடவும், கருத்துவளர்ந்திடவும், பகுத்தறிவு பொங்கிடவும், பல்கலைக்கழகத்திலும், பற்பலகல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும், தமிழிலும் ஆங்கிலத்திலும், அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தி அல்லும் பகலும் ஒல்லும் வகையெல்லாம் செயற்கரிய செய்பவர்கள் என்பதனுல்தான் ஆகும்.

இனி நமதுமொழி தமிழ்மொழி. தமிழ்மொழி அமிழ்தினும் இனியமொழி, உயர் தனிச் செம்மொழி, தமிழுக்கும் அமுதென்றுபேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர் என்று தமிழ்க்கவி கனகசுப்புரத்தினம் முழங்குகின்ருர். வடமொழியின் உதவியின்றி இன்றும் என்றும், நிலைபெற்றுத் தமிழ் நன்குவழங்கக் கூடியதென்று Dr. கால்டுவெல் பாதிரியார் அழகாகக் கூறியுள்ளார். பரிதிவிற்கலைஞன் என்ற சூரியநாராயண சாஸ்திரி, தமிழ்

(8ம்பக்கம் பார்க்க.)

## தமிழன் எவருக்கும தாழான்.

7-ம் பக்கத்தொடர்ச்சி.

மொழியழகு வடமொழிக்கலப்பால்குறை வுற்றது என்று கூறியுள்ளனர். பற்பல பொன்னுரைகள் உண்டு. ஆனால் தேவையில்லை பல அறிஞர்கள் குறிப்பிடுவாதலின். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையவர்கள் மொழிந்ததுபோலகன்னடமும், களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்ஆரியம்போல் உலக வழக்கழிந்து ஒழிந்துசிதையா உன்சீரிளமைத்திறம்வியந்துசெயல்மறந்துவாழ்த்துதுமே என்று உளமார யாமும் வாழ்த்துகின்றோம்.

தம்மொழிப்பற்றே தாய்நாட்டுப்பற்று என்பர். நாடு என்பது என்ன? அரண் ஆளும் அமைந்ததுநாடு. அரண் அமைப்பதுயார்? இனப்பற்றால் ஒற்றுமைமிக்க நாட்டுமக்கள் அரண் அமைத்தல் வேண்டும். இனம் என்பது என்ன? இதற்கு எளிதானவிடை, தனக்கெனவாழாப்பிறர் குறியாளர் இல்லாவிடினும், தன்னைஒத்த உரிமை பூண்டவராய் எல்லோரும் வாழ வேண்டும் என்ற எண்ணமுள்ளவராய் எல்லோரும் அமைந்த ஓர் கூட்டம் என்பதே இனம். பேராசிரியர் Holland Roce அவர்கள் இனம் என்பது ஓர் உணர்ச்சி என்றுகூறியதுபோல, உணர்ச்சியால் ஒன்றுபட்டதே ஓர் இனமாகும். உணர்வால், உரிமையால், கொள்கையால், நோக்கத்தால் ஒன்றுபட்டதே இனமென்று கூறப்படும். இனஉணர்ச்சியுடையவரே எழுச்சியுறமுடியும் என்பதற்கும் ஐரோப்பா நாடுகள் அனைத்தும் எடுத்துக் காட்டாகும். திராவிடர் இனத்தைச் சார்ந்தவர் யார் என்று யார் கேட்பினும் பழந்தமிழரின் பண்புள்ள கலையாம் திராவிடக் கலையை, நாகரிகத்தைக் கொண்டவரே திராவிடராவர் என்று பலபேரறிஞர்களும் கூறியுள்ளதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

திராவிடரின் நாட்டின் எல்லையை அறிய வரலாற்றிலே இடமுண்டு, பண்டைப் பொருளாதார நிலையும் இன்றைய இழிநிலையும் உணரமுடியாததல்ல. பெண்கள் ஆண்களையொப்ப வாழ்ந்ததுபோய் உரிமையிழந்து, மண், பெண், பொன், என்ற ஆசைப்பொருள் ஒன்றாய்அறிவற்ற பொருளாக்கப்பட்டுவிட்டனர். குறளாண்டமக்களை மனுநீதி ஆளுகின்றது. தமிழினைவிட வடமொழி வளம்பெறுகிறது. இசையினில் தெலுங்கு தேவையென்கின்றனர். புராணமே பொக்கிஷம் என்று கூறுவோருமுண்டு. ஆனால்இந்நிலையெல்லாம்மாறத், திராவிடம்மீள இன்று கூடியுள்ள மகாநாட்டில் பலரின் சொற்பொழிவுகளு, கருத்துக்கு மருந்தாகஇருக்கும். பேராசிரியர் முத்தையாவின் பொருளாதாரவிளக்கம், கான்பகதூர் கலிபுல்லாவின் கருத்துரையும் அறிஞர்பலரின் ஆழ்ந்தஉரையும் வரவேற்கத்தக்கதாகும். இ[illegible]னில் இருந்தி ஈண்டுள்ள தங்களின் பொன்னானபொழுதினைவீண் போக்காது மீண்டும்ஒருமுறைவந்துள்ள அனைவரையம் வேண்டு இம்மாநாட்டின் வெற்றிக்குத் துணைபுரியுமாறு வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.


பரமசிவன் வந்துவந்து போவார்! பத்தினிக்குத் துக்கம் வரும், பழயபடி தீரும்!!
இதுவே நாடகமாக இருக்கும் இன்றைய நிலையை மாற்றி கலை, ஆரிய வலையாகாமல் பாதுகாக்க ஒரு முயற்சி, அறிவு வளர்ச்சிநாடகம்.
'திராவிடநாடு' திராவிட நடிகர்கழக' உதவிநிதிக்கு.

சந்திரோதயம்

புரோகிதப் புரட்டு!
இரசவாதம்!
மடாதிபதிகள்
கோலாகலம்,
வைதீகத்தின்
விளைவுகள்,
ஆகியவற்றைச் சித்த
ரித்துக் காட்டும்
நாடகம்

9—4—44 பங்குனி கடைசீ ஞாயிறன்று
மதுரை
ஸ்ரீ கோபாலகானசாலா தியேட்டரில்,
விருதுநகர் நகராண்மைக் கழகத்தலைவர்,
ராவ்பகதூர்,
வி. வி. இராமசாமி அவர்கள் தலைமையில்
நடைபெறும். தமிழரே வருக!
தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கும்,
ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன், (உ[illegible]கமிட்டித் தலைவர்)
ஏ. வேணுகோபால், (மதுரை, S. I; L. F; செயலாளர்)
டிக்கட் ரூபா:-5, 3, 2,


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.